2010 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர் மாவட்டங்கள் இரண்டும் ஒன்றாக இருந்தபொழுது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் அரசு மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகவும், திருப்பூர் மாவட்ட முதன்மை மருத்துவமனையாகவும் செயல்பட்டு வந்தது. இப்பொழுது திருப்பூர் தனியாகப் பிரிந்த நிலையில் பொள்ளாச்சி மாவட்ட முதன்மை மருத்துவமனையாக அரசாணை வெளியிட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. பொள்ளாச்சி அரசு மருத்துவமனை என்பது தமிழகத்திலேயே அதிக நோயாளிகள் வருகிற முதன்மை வட்ட மருத்துவமனை. அந்தப் பொள்ளாச்சி வட்ட அரசு மருத்துவமனைக்கு மாவட்ட முதன்மை மருத்துவமனையாக ஆணை வழங்கியதோடு நிற்கின்ற பணியை, போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கி, தேவையான அனைத்து சிகிச்சைகளும் அங்கேயே பெறத்தக்க வகையில் செய்வதற்கு மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் ஆணை வழங்கப்பட்டது என்று அவர்களே கூறுகின்றார்கள். படிப்படியாக அதைச் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

17—

பயிற்சிப் பள்ளி

***84304—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 10

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் நகரில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் நகரில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க தற்போது அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாளுக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், அதைச் சுற்றியிருக்கிற செங்கல்பட்டு போன்ற பல்வேறு பகுதிகளில் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை வைத்து எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் அரசு நிர்ணயிக்கிற விதிகளுக்கு முரணாக, பல தனியார் கல்வி நிறுவனங்கள் கல்விக் கொள்ளையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று நான் பல முறை சட்டமன்றத்தில் பேசி, அதன்மூலமாக ஓய்வுபெற்ற நீதிபதியைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் இப்பொழுது நிலுவையில் இருப்பதாகக் கருதுகிறேன். இந்த நிலையில் இதுபோன்ற செயல்பாடுகளைத் தடுக்கின்ற வகையில் இனிவரும் காலங்களில் காஞ்சிபுரத்தில் அரசே இதுபோன்ற ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்தினால் இந்தக் கல்விக் கொள்ளையில் ஈடுபடுகின்ற கல்வியாளர்களுக்குப் போகின்ற பணத்தைத் தடுப்பதற்கும், சீரான கல்வியை ஆசிரியர் பெருமக்களிடமிருந்து சமூகம் பெறுவதற்கும் வாய்ப்பிருக்கும். அந்த வகையில் தமிழக அரசே இந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை நடப்பு நிதியாண்டில் தொடங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2010 நவம்பர் 10]

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 762 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அரசின் சார்பாகவும், அரசு உதவியோடும், அதைப்போல தனியாருடைய முயற்சியின் காரணமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஆறாயிரம் மாணவர்கள் ஒவ்வோர் ஆண்டும் அதிலிருந்து வருகிறார்கள். எனவே, ஆசிரியர் பயிற்சி முடித்துவிட்டு வரக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கையைக் கருத்திலே கொண்டு, இப்போது தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் புதிதாக எந்தவொரு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கும், minority institutions தவிர, வேறு எந்தவொரு நிறுவனத்திற்கும் இப்போது அனுமதி அளிப்பதில்லை. எனவே, இந்த அடிப்படையிலே இருக்கிறபோது, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, ஏற்கெனவே மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் ஒன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது; அரசு உதவிப் பெறக்கூடிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்று இருக்கிறது; தனியார் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 42 இருக்கின்றன; காஞ்சிபுரம் தொகுதியிலே மாத்திரம் 6 இருக்கின்றன. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலேகொள்கிறபோது, புதிதாக அரசினுடைய சார்பிலேயும் ஒன்று அங்கே ஆரம்பிக்கக்கூடிய அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

18—

சாலை வசதி

***114311—திரு. எம்.என். கந்தசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—